செ.வெ. எண். 729 நாள். 07.12.2011

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மற்றும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாகத்தத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் நேரில் ஆய்வு.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மற்றும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரிக்கு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாகத்தத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

மாண்மிகு செய்தி மற்றும் சிறப்பு திட்ட செயலாகத் துறை அமைச்சர் அவர்கள், இன்று (7.12.11) காலை, முதலாவதாக தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவிற்கு சென்று திரைப்படப் பிரிவின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். வீடியோ எடிட்டிங் அறைக்குச் சென்ற அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டு வரும் செய்தி மலர் மற்றும் வீடியோ தொகுப்பினை பார்வையிட்டார். பின்னர் தமிழ்நாடு

அரசு திரைப்படப் பிரிவு வளாகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். வளாகத்தை, சுத்தமாக தொடர்ந்து பராமரித்துவர அறிவுரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியின் பல்வேறு பிரிவுகளுக்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரி வளாகத்தை பார்வையிட்டு அதனை நல்லமுறையில் சுத்தமாக தொடர்ந்து பராமரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மேலும் இங்கு அமைந்துள்ள படப்பிடிப்பு வளாகங்களை புதுப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியில் ரூபாய் 1 .42 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு தளத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து படம் பதனிடுதல், ஒலிப்பதிவுக்கூடம், ரீ–ரிகார்டிங் அறை, திரையரங்கு போன்ற பல்வேறு பிரிவுகளுக்குச் சென்று பார்வையிட்டார். பின்னர் எம்.ஜி.ஆர். அரசு திரைபடக் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்களின் மத்தியில் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவும், சிறப்பான பணிகளை செய்துவருவதாகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்ததலைவி அம்மா அவர்கள், இங்கு பயிலும் மாணவ–மாணவிகளின் நலன் கருதி குறைந்த கல்விக் கட்டணத் தொகையாக ஆண்டு ஒன்றிக்கு ரூ. 10 ஆயிரம் மட்டுமே நிர்ணயித்துள்ளார்கள் என்றும், இதில் மாணவ–மாணவிகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு அரசு கல்வி உதவித் தொகையாக ரூ. 6,000/– வரை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். இங்கு, இயக்குதல், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, படம் பதனிடுதல், படத் தொகுப்பு ஆகிய பாடப் பிரிவுகள் இயங்கி வருகின்றன என்றும், இங்கு பயின்றுவரும் மாணவ–மாணவிகள் நல்ல முறையில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்று வெளியில் சென்று தங்கள் திறமையினை வெளிக்காட்டி இக் கல்லூரிக்கு சிறப்பினையும், பெருமையினையும் தேடித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு தமிழக முதமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க திரைப்படக்

கல்லூாி மாணவ–மாணவிகளாகிய உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்து உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் அதனை கேட்டறிந்து மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்காக வந்துள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியில் இங்கு குறைகள் ஏதுமில்லையென்று மாணவ–மாணவியர்கள் சொல்வது கேட்டு தான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் முனைவர் பொ.சங்கர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாணவர் சங்கத் தலைவர் திரு இன்னாசி பாண்டி நன்றி கூறினார்.

அமைச்சரின் ஆய்வின் போது , செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இணை

இயக்குநர் (நிர்வாகம்) திரு தங்க புகழேந்தி, துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு கு.தாணப்பா , எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரியின் முதல்வர் திரு ஸ்ரீதரன், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் தலைமை தயாரிப்பாளர் (பொறுப்பு) திரு ஜீ.மோகன், பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9